
# திருமறை நேசன்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : . மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


கிறிஸ்துவின் மரணம் 1

நியாயத்தீர்ப்பின் நாள் 6

பெண்கள் பகுதி - அவளாலே 9

உயிர்த்தெழுதல் 13

இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் 18

வேதாகமத்தை பகுத்துப் படிப்பது எப்படி? 22

சபையில் அங்கம் வகிப்பது அவசியமா? 24

வழி நடத்துபவராக ஒரு பிரசங்கியார் 26

# THIRUMARAI AASAAN

Editor — E.Z.S. RAJANAYAGAM

Honorary — J.C. CHOATE

Published by Church of Christ

Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.7 April1994 Issue 4


**ஆசிரியவுரை**

## கிறிஸ்துவின் மரணம்

உலகமானது இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், பரிசுத்த வேதாகமம் கிறிஸ்துவின் மரணமே அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று தீர்க்கமாகச் சொல்கிறது. ஆதித் திருச்சபை மக்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி – கிறிஸ்துவின் பிறப்பை அல்ல – அவருடைய தியாக மரணத்தை நினைவு கூறும் வண்ணமே கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டனர். (அப் 20:7, Iகொரி 11:26)

உண்மையாகவே, கிறிஸ்துவின் சிலுவை மனித வரலாற்றில் ஒரு திருப்புமுனை. ஆனால், நமதாண்டவரின் அப்பழுக்கற்ற, தூய்மையான, பாவமற்ற, பரிசுத்தமான, மகிமை பொருந்திய வாழ்வைக் கணக்கிலெடுத்து, அதோடு அவருக்கு நேர்ந்த மரணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், அதைவிடக் கொடுமை ஏதாவது ஒன்று இருக்க முடியுமா? என்று தான் எண்ணத் தோன்றும். என்ன செய்வது, அது தேவனுடைய சித்தமாயிற்றே!

சரி, இப்பொழுது, தேவ மைந்தனாகிய கிறிஸ்து ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது? அவருடைய மரணத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் என்ன? என்று கீழே காண்போம்.

### 1 இயேசு ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது?

பெரும்பாலான சமயங்களில் கிறிஸ்துவின் மரணத்தை நாம்

நினைக்கும் பொழுது, ரோம அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அந்தச் சிலுவை மரணம் அவருக்குத் தேவைதானா? என்று எண்ணத் தூண்டும். ஆனால், வேதவாக்கியங்கள் அது தேவையானது என்றே சொல்கிறது. குறைந்தது மூன்று காரணங்களுக்காக அவர் மரிக்க வேண்டியது அவசியமாயிற்று.

*a) பாவமன்னிப்புக்காக (The Remission of Sin)*

எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர், ***"இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது"*** என அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் (எபி 9:22). நமதாண்டவருக்குமுன்னோடியாக, வழிகளை ஆயத்தம்பண்ண வந்த யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: ***"இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"*** என்றார் (யோவா 1:29). மேலும் வெளிப்படுத்தல் புத்தகம், "தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்" (வெளி 1:6) என்று சொல்கிறது. தன்னுடைய பக்திவைராக்கியத்தால், புதிய ஏற்பாட்டில் தனக்கென ஒரு இடத்தை நிரந்தரமாகப் பிடித்துக்கொண்ட பவுலடியார், கொரிந்து பட்டணத்தாருக்கு நிருபம் எழுதும்பொழுது, இன்னும் தெளிவாகவும், புரியும்படியாகவும் சொல்வதைக் கவனியுங்கள். ".....நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறார். (I கொரி 5:7). அதாவது, எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரவேலருக்கு பஸ்காவின் மூலம் விடுதலை கிடைத்ததைப் போல, உலக மக்களுக்கு பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து தமது மரணத்தின்மூலம் விடுதலை வாங்கிக் கொடுத்தார் என்று கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிரதான ஆசாரியர் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், தன்னுடைய பாவங்களுக்காகவும் பலி செலுத்துவதின் மூலம் பெற்றுக் கொடுத்த விடுதலை முற்றிலும் தற்காலிகமானது. ***வருடந்தோறும் அதைச் செய்ய வேண்டியதிருந்தது. ஆனால், கிறிஸ்துவின் மரணமோ பாவத்திலிந்து நிரந்தர விடுதலையைப் பெற்றுத் தந்தது.***

*b) தேவனுடைய நித்திய நோக்கம் (God's Eternal Purpose)*

தேவனுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அநேக சமயங்களில் அளவு கடந்த ஞானமுள்ள தேவனுடைய நித்திய நோக்கத்தை, குறைந்த அறிவுள்ள மனிதனால் கிரகித்துக் கொள்ள முடிவதில்லை. தான், பரலோக மேன்மையிலிருந்து பூலோகத்திற்கு இறங்கி வந்ததன் நோக்கத்தை கிறிஸ்து இவ்வாறாக விவரிக்கிறார்.

"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்றார் (யோவா 6:38). ஆதியிலே தன்னால் ஆசையோடு படைக்கப்பட்ட ஆதாமையும்,

ஏவாளையும் தன்னுடைய வஞ்சக வார்த்தைகளால், சாத்தான் பாவத்திற்குட்படுத்தின பொழுது, தேவன் சாத்தானை எச்சரித்தார். "....அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார் (ஆதி 3:15). இந்த வாக்குத்தத்தம் இயேசுக் கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்து, சிலுவை மரணத்தை வென்று உயிர்த்தபொழுது நிறைவேறிற்று. சாத்தானின் தலையும் நசுக்கப்பட்டது.

ஆக, தேவனுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்ற கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்தது.

*c) மனிதனை தேவனோடு ஒப்புரவாக்க (To Reconcile man to God)*

ஆதிப் பெற்றோர், ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்த பொழுது, தேவனாகிய சிருஷ்டிகருக்கும், மனிதனாகிய சிருஷ்டிக்கும் இருந்த அற்புதமான உறவு அறுந்து போனது. பரிசுத்த தேவனிடமிருந்து மனிதன் பிரிக்கப்பட்டான். பாவம் தான் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கிறது என்பதை ஏசாயா தீர்க்கன் எடுத்துச் சொல்கிறார். "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது;உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா 59:2)

இப்படிப் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்து போன மனிதனை. மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்துவின் மரணம் அவசியமாயிற்று. "பகைமையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று எபேசியரில் காண்கிறோம். (எபே. 2:16) மீண்டும் பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும் பொழுது, "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம்" என்கிறார். (ரோம 5:10). கிறிஸ்துமாத்திரம் மரித்திராவிட்டால் மனிதன் தேவனோடு ஒருபோதும் ஒப்புரவாகியிருக்க முடியாது.

ஆக, பாவ மனிதனை, பரிசுத்த தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்து சிலுவையில் மரிக்க நேர்ந்தது.

## II கிருஸ்துவின் மரணத்தின் மூலம் அறிய வேண்டிய பாடங்கள்

இயேசுக் கிறிஸ்து ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது என்று பார்த்தோம். கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. அத்தியாக மரணத்தின் நோக்கத்தை. அதன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை, அவரைப் பின்பற்ற விரும்பும் பிள்ளைகள் யாவரும் தெளிவாகப் புரிந்து கொண்டால்,

மத உலகில் இன்று நிலவும் பெரும்பாலான குழப்பங்களைத் தவிர்த்து, தேவனுக்குப் பிரியமான மெய்ப்பிள்ளைகளாக வாழ முடியும். இப்பொழுது முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய மூன்று பாடங்களைக் கவனிப்போம்.

*a) மோசேயின் பிரமாணம் எடுத்துப்போடப்பட்டது*

கிறிஸ்துவின் தியாக மரணத்தால் கிடைத்த சுவிசேஷத்தை அறிந்து. ஏற்றுக்கொண்டு அதில் நிலைத்திராமல், பழைய பிரமாணத்திற்குத் திரும்பிச் சென்ற கலாத்தியா பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, புதிய பிரமாணத்தின் மேன்மையைக் குறித்து பவுல் இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். "........நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. (கலா 3:21). எபிரேயர் நிருபமும் இதைக் குறித்து சந்தேகத்திற்கிடமின்றிப் பேசுகிறது. "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்: பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது" (எபி 8:13). ".......இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார் (எபி 10:9). மேலும், இதே நிருபம் கிறிஸ்து புது உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார் என்றும் சொல்கிறது (எபி 8:6).

இரண்டு உடன்படிக்கைகள் ஒரே நேரத்தில் அமலில் இருக்கமுடியாது என்பதை நாமனைவரும் ஏற்றுக் கொள்வோம். ஆனால் இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்துவச் சமுதாயம் இரண்டு உடன்படிக்கைகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. தாங்கள் விரும்புகிற, தங்களுக்குச் சௌகரியமாயிருக்கின்ற சில மோசேயின் பிரமாணங்களைத் தொடர்ந்து பின்பற்றி கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அவமாக்கிக் கொண்டுள்ளனர். தன்னால் முடித்து வைக்கப்பட்ட ஒரு உடன்படிக்கைக்கு, உயிர் கொடுக்க முயற்சிப்பதை தேவன் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்.

மோசேயின் பிரமாணத்தை, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழும் நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அது நம்மைக் கட்டுப்படுத்தாது. அதற்காக, அதை நாம் தெரிந்து கொள்வதே தவறாகாது. ஏனெனில், "...முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோம 15:4)

*b) அவருடைய சபை தோற்றுவிக்கப்பட்டது*

மத்தேயு பதினாறாம் அதிகாரத்தில் தன்னுடைய சபையை ஸ்தாபிக்கப் போவதாக இயேசு வாக்களித்தார். ஒரு சமயம், மனித குமாரனாகிய தன்னை ஜனங்கள் யாரென்று நினைக்கிறார்கள் என்று இயேசு தம்முடைய சீடர்களைப் பார்த்துக் கேட்டார் (16:13) அக்கேள்விக்கு

சரியான பதிலை அவர் பெற்றுக் கொள்ளாத பொழுது, சீடர்களே, நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்களென்று கேட்டார். (16:15). அப்பொழுது பேதுரு அழுத்தம் திருத்தமாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான் (16:16). அப்பொழுது தான், இயேசு பேதுருவைப் பார்த்து, "........நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார் (16:18)

ஆனால், அவருடைய எதிரிகளோ அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவருடைய செல்வாக்கைச் செயலிழக்கச் செய்துவிடலாம் என்று தவறாக எண்ணினர். ஆனால் நம்முடைய கிறிஸ்துவோ மரணத்தை வென்று, கல்லறையிலிருந்து வெற்றி வீரராக எழுந்தார். பரிசுத்த ஆவியானவரை அனுப்பி, அப்போஸ்தலர்களை பெலத்தால் இடைக்கட்டி, சபையின் உண்மைத் தன்மையை உலகுக்கு காட்டினார். ஆம், இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து வந்த ஐம்பதாவது நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு அப்போஸ்தலன் கேட்டோரின் உள்ளத்தை உடைத்த ஒரு பிரமாதமான பிரசங்கத்தைச் செய்தார். இயேசுக் கிறிஸ்து மரணத்தை வென்றார் என்பதே அப்பிரசங்கத்தின் மையப் பொருள். அந்நாளில் சபையானது எருசலேம் பட்டணத்தில் முறையாகத் தோற்று விக்கப்பட்டது. அதுமுதல் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தமது சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2: 42)ஆம் அவருடைய மரணத்தின் மூலமாகக் கிடைத்த ஆசீர்வாதங்களில் மிகப்பெரியது "கிறிஸ்துவின் சபை"

*(`)   உயிர்த்தெழுதலின் நம்பிக்கை*

இப்பூமியில் வாழும் திரளான மக்கள் உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கையற்றவர்களாக இருக்கும் பொழுது, கிறிஸ்தவர்களாகிய நமக்கு அந்த நம்பிக்கை எப்படிக் கிடைத்தது? கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலுமே நம்முடைய நம்பிக்கையின் அஸ்திவாரம்.

இயேசுக்கிறிஸ்து இப்பூவுலகில் ஊழியம் செய்த நாட்களில், தான் அடிக்கடி சந்தித்த, தன்னை நேசித்து, ஏற்று, உபசரித்த குடும்பத்தைச் சேர்ந்த லாசரு மரித்துப் போனான். செய்தி கேட்ட இயேசு அங்கு வந்து சேர்கிறார். லாசருவை உயிரோடே எழுப்புமுன் மார்த்தாளோடு ஒரு உரையாடல் நடக்கிறது. அப்பொழுது ஒரு அற்புதமான செய்தியை கர்த்தர் வெளிப்படுத்தினார். "இயேசு மார்த்தாளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"என்றார் (யோவா 11:25). ஆயினும், இயேசு மரணத்தை வென்றபோது தான் அது மேலும் உறுதியாக்கப்பட்டது.

ஆம், இயேசுக் கிறிஸ்து வரும்பொழுது, "பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள்" (யோவா 5:28). முதலாம்

நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் பாடுகளால் வேதனைப்பட்ட பொழுது உயிர்தெழுதலின் நம்பிக்கையை வைத்துத் தான் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டார்கள் (I தெச 4:13–18). இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றுள்ளபடியால், அவரைப் பின்பற்றும் நாமும் ஒரு நாளில், பரலோகம் செல்வோம் என்பதற்கு முன்னோடியாக அவர் இருக்கிறார்.

இந்த வர்ணிக்க முடியாத ஈவை கிறிஸ்துவின் மரணமே நமக்குப் பெற்றுத் தந்தது.

கர்த்தருக்குள் அருமையானவர்களே, கிறிஸ்துவின் மரணத்தை நாம் ஒப்புக்காக நினைக்காமல், அதன் மெய்யான நோக்கத்தை அறிந்து, அவைகளை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுவோம். அதன் மூலம் பரலோக பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வோம்!

**- EZS ராஜநாயகம்.**

# நியாயத் தீர்ப்பின் நாள்

நியாயத் தீர்ப்பின் நாள் ஒரு மகத்தான நாள். இதுகாறும் பூமியில் வாழ்ந்த மக்களெல்லாம் நியாயந்தீர்க்கப்படும் நாள். அந்த நாளை ஒரு மகத்தான நாள் என்று சொல்ல அநேக காரணங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை நாம் இங்கே காண்போம்.

(1) அந்த நாள் எப்பொழுது என்று எந்த ஒரு மனிதனுக்கும் தெரியாது. ஏனெனில் அந்த நாள் கர்த்தரால் நியமிக்கப்படும் நாள். எபிரேயர் நிருபம் சொல்வதைக் கவனியுங்கள். "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்றுள்ளது.

(2) பூமியில் வாழ்ந்து மறைந்தவர்கள், வாழ்கின்றவர்கள், இனி வருகை மட்டும் வாழப்போகிறவர்கள் ஆகிய அனைவரும் அந்நாளில் இருப்பார்கள். கோடிகோடியாகவல்லோ வாழ்ந்திருப்பார்கள். கற்பனைக்கு எட்டாத எண்ணிக்கையாக இருக்குமே. அது எப்படி சாத்தியம் என்று திகைக்கிறீர்களா? "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை". (லூர்க். 1:37). அப்போஸ்தலன் பவுல் இவ்விதமாக எழுதுகிறார். "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக

வெளிப்பட வேண்டும்" (*II* கொரி 5:10). அதே பவுல், ரோமர் நிருபத்தில் சொல்வதையும் கவனியுங்கள். "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோம. 14:12).ஒருவரும் தப்பிக்க வாய்ப்பில்லை.

(3) பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவின் மூலமும். பரிசுத்த ஆவியானவரின் மூலம் வெளியாக்கப்பட்ட வசனத்தைக் கொண்டும் நியாயந்தீர்ப்பார். புகழ்மிக்க மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில், அத்தேனே பட்டணத்தாரை பவுல் இவ்விதமாக எச்சரிக்கிறார். "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே, அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்." (அப். 17:30,31) "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று நமதாண்டவர் சொன்னார். (யோவா 12:48)

(4) ஒருவன், இப்பூமியில் எப்படி வாழ்ந்தான் என்பதை அடிப்படையாக வைத்தே நியாயத் தீர்ப்பு இருக்கும். அவனவன் வாழ்ந்தபொழுது எண்ணிய எண்ணங்கள், பேசின வார்த்தைகள், செய்த செயல்கள் அனைத்தும் அந்நாளில் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். "நல்ல மனிதன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனிதன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான். மனிதன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று கிறிஸ்து சொல்கிறார். (மத். 12:35,37)

(5) நியாயத்தீர்ப்பில் தேவன் பாரபட்சம் காட்டப்போவதில்லை. தேவனுடைய இந்தப் பண்பைக் குறித்து, பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும்பொழுது அழகாக எடுத்துரைக்கிறார். "தேவனிடத்தில்

பட்சபாதமில்லை" (ரோம. 2:11) அதே பவுல். மீண்டும் கொலொசே பட்டணத்தாருக்கு எழுதும் பொழுதும் இதே கருத்தை வலியுறுத்துகிறார்." அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்: பட்சபாதமே இல்லை. (கொலொ 3:25). புறஜாதியிலிருந்து முதன் முதலாக சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட கொர்நேலியுவும், அவன் குடும்பத்தாரும் மனமாற்றம் அடைந்தபொழுது. பேதுரு பேசத் தொடங்கி இவ்விதமாகச் சொல்கிறார். "........ தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும். எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்றார். (அப்.10:34,35)

(6) நியாயத்தீர்ப்பு இறுதியானது. ஒருவன் மரிக்கும் பொழுது. கர்த்தருக்கு முன்பாக. "அவனுடைய நிலை" மாற்ற முடியாதது. மரணத்திற்கு பின்பு ஒருவனுடைய நிலையை மாற்ற முயற்சிக்கும் எந்த முயற்சியும் வீணானது. அவனுடைய உறவுகள் ஜெபிப்பதன் மூலமோ, மற்றவர்களை மரித்தவனுக்காக ஜெபிக்கச் சொல்வதன் மூலமோ ஒரு பயனும் இல்லை. மறுபடியும் மனம்மாற ஒரு வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவே கிடையாது. ஆகவேதான், ஒருவன் பூமியில் வாழும்பொழுதே தேவனுக்குக் கீழ்ப்படியக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்விதமாகவே நாம் தேவனைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும். (மாற் 16:16, வெளி.2:10).

(7) அந்நாளில் கர்த்தர். "அக்கிரமக்காரரை நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்களை நித்திய ஜீவனுக்கும் அனுப்புவார்" (மத் 25:46). பரலோகம், நரகம் இரண்டுமே நித்தியமானது. அதாவது, இரட்சிப்பை இழந்து போனவர்கள், பாவிகள், தேவனற்றவர்கள் மற்றும் அவிசுவாசிகள் நரகத்திலே தள்ளப்பட்டு முடிவில்லாத வேதனையை நித்திய காலத்திற்கு அனுபவிப்பார்கள். இப்படியுமா நடக்கும் என்று திகைக்கிறீர்களா? அன்பும் இரக்கமும் உள்ள தேவன் அப்படிச் செய்வாரா? தயவு செய்து தேவனைக் குற்றம் சொல்லாதீர்கள். பூமியின் மக்களாகிய நம்மையெல்லாம் தேவன் மிகவும் நேசித்து, நமக்கு இரட்சிப்பை அருளும் பொருட்டாக தன்னுடைய ஒரே பேறான குமாரனை பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார். ஒருவன் தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகியவைகளை உதாசீனம் செய்வானானால், தன்னுடைய செயலுக்குண்டான விளைவை சந்தித்துத் தானே ஆக வேண்டும். மாறாக, தேவனை விசுவாசித்து,

கீழ்ப்படிந்து. அதிலே நிலைத்திருப்பவர்கள் நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்து, என்றென்றும் கர்த்தருடன் வாழ்வார்கள்.

நியாயத்தீர்ப்புக்கு நாம் ஏன் ஆயத்தமாக வேண்டுமென்பதின் அவசியத்தையும், நியாயத்தீர்ப்பில் நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டால், தேவன், நமக்கு வாக்குத்தத்தமாகக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களையும் அறிந்து கொள்வோம். நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாவோம்!

J.C. ஈட்

பெண்கள் பகுதி

# அவளாலே.........

மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும் நன்மை, தீமை ஆகிய இரண்டையும் செய்யும் திராணியுள்ளவராகவே உள்ளனர். ஒருவருடைய வாழ்க்கை, தேவனுக்குப் பயப்பட்டு அவருடன் நெருக்கமாக வாழ்வதற்குண்டான வழிகளை ஜனங்களுக்குப் போதிக்க செலவழிக்கப்படலாம். அல்லது அதே வாழ்க்கை, தேவனிடத்திலிருந்து விலகி, ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கெட்டுப் போவதற்கு ஏதுவாகவும் அமையலாம். நம்முடைய வாழ்க்கை முறை இந்த இரண்டில் எந்த வகையில் உள்ளது என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

*I* ராஜாக்கள் 17–ம் அதிகாரத்தில், ஆகாப் என்று சொல்லக்கூடிய மனிதனின் வாழ்க்கையைக் குறித்து தெரிந்து கொள்ள முடியும். இந்த ஆகாப், இஸ்ரவேல் தேசத்தின் மீது ராஜாவாக இருந்தான். இவனைப் பற்றி வேத வாக்கியங்கள் மோசமாக விமர்சனம் செய்கிறது. "தனக்கு முன்னிருந்த எல்லோரைக் காட்டிலும், தேவனுடைய பார்வையில் பொல்லாங்கானவைகளைச் செய்தான்". இவன்.

விக்கிரகக் கடவுளான பாகாலை வணங்கும் யேசபேல் என்னும் பெண்ணை இவன் தனக்கு மனைவியாகக் கொண்டான். அதன் விளைவாக, அவனும் பாகாலுக்கு சேவை செய்து, ஆராதிக்க வேண்டியதாயிற்று. பாகாலுக்கு தான் சமாரியாவிலே கட்டின கோயிலிலே ஒரு பலிபீடத்தை உண்டு பண்ணினான். இதன்மூலம் இஸ்ரவேலிலே தனக்கு முன்பிருந்த எல்லா ராஜாக்களைக் காட்டிலும், தேவனுக்கு கோபமூட்டினவனாகக் காணப்பட்டான்.

ஆகாப், இயல்பாகவே, நன்மை செய்வதில் பெலவீனமானவனும், அக்கிரமம் நிறைந்தவனுமாயிருந்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்த

கதையாக இவனுக்கு மனைவி வந்து சேர்ந்தாள். பரலோகத்தின் தேவனுக்குப் பயந்து நடுங்குகின்ற மனைவியாகத் தேடாமல், விக்கிரக வணக்கத்திற்கு தன்னை அடிமைப்படுத்திக் கொண்ட பெண்ணை மணந்து கொண்டான். அந்த யேசபேல் என்ன செய்தாள்? அவளாலே தேவத்தின் மக்கள் ஏதாவது மாற்றத்தைச் சந்தித்தார்களா? தயவுசெய்து அவளின் கைங்காரியம் என்று வேதாகமம் சொல்வதைப் பாருங்கள். தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப் போட்ட ஆகாபைப் போல ஒருவனுமில்லை. (Iஇராஜாக்கள் 21:25).

(1) கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் எலியாவைத் தவிர மற்ற அனைவரையும் சங்கரித்துப் போட்டாள் என்று I இராஜாக்கள் 18:4. 22ஆகிய வசனங்கள் கூறுகிறது.

(2) I இராஜாக்கள் 18:19–ல், இவள் கானானிய தேவதை என்று சொல்லப்படும் தோப்பு விக்கிரகத்திற்கும், அதன் 400 தீர்க்கதரிசிகளுக்கும் பக்க பலமாக இருந்தாள். அந்த தீர்க்கதரிசிகள் யேசபேலின் பந்தியிலே விருந்துண்டார்கள். இவர்களை மாத்திரமல்ல, பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும் சேர்த்து உபசரித்தாள். அந்நிய தேவதைகளுக்கும் புறமார்க்கங்களுக்கும் இவள் அன்றாடம் செய்த பெருஞ்செலவை கற்பனை செய்து பாருங்கள்! இஸ்ரவேலுக்கு விரோதமாக இவள் வீட்டிலே இருந்து வெளியே சென்ற போதனைகளையும் எண்ணிப் பாருங்கள்!

(3) கர்மேல் மலையில் பாகாலின் தீர்க்கதரிசிகள் மரித்துப்போனதால் அதற்கு பதிலாக கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவைக் கொல்ல சபதமேற்கிறாள். (I இராஜாக்கள். 19.2).

(4) தனது அரண்மனைக்கு அருகாமையில் இருந்த நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை அபகரிப்பதற்காக, இதயத்தைக் கல்லாக்கி அவனைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தாள் (I இராஜா. 21ம் அதி).

(5) தன் மகனும், தன்னுடைய வழியைப் பின்பற்றும்படியாக "பொல்லாப்புக்குத் துணை போதல்" என்ற நஞ்சை ஊட்டி வளர்த்துள்ளாள். (I இராஜா. 22:51).

(6) இந்தக் காலக்கட்டத்தில் தான் யூதாவின் இராஜாவாகிய யோராம் ஆகாபின் குமாரத்தியாகிய அத்தாலியாவை மணந்து கொண்டாள். இந்த மனைவி ஆகாபின் மகளாக இருந்தபடியால் ஆகாபின்

குடும்பத்தாரைப் போல செய்து இஸ்ரவேலின் இராஜாக்களின் வழியில் நடந்தான். தன்னுடைய இராஜ்யபாரத்தை நிலைநிறுத்துவதற்காக தனக்கிருந்த அதிகாரத்தினால் சிறிதும் ஈவிரக்கமின்றி, சகோதர பாசமற்றவனாய் உடன்பிறந்தவர்களைக் கொன்று போட்டான். இவன் மகா கொடியவனாய் இருந்தபடியால் குணப்படுத்த இயலாத வியாதியில் சிக்கி, மரணமடையும்படியாகக் கர்த்தர் செய்தார் என்று வசனம் கூறுகிறது.

(7) இப்பொழுது, யோராமின் மகனாகிய அகசியா இஸ்ரவேலின் இராஜாவாக்கப்பட்டான். ஆகாப் இராஜாவின் மகளாகிய அத்தாலியாதான் இவன் தாய். இவனும் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். "........... துன்மார்க்கமாய் நடக்க அவனுடைய தாய் அவனுக்கு ஆலோசனைக் காரியாயிருந்தாள்". (*II* நாளா. 22:3).

(8) பிற்பாடு அகசியா கொலை செய்யப்பட்ட பொழுது, ஆகாபின் மகளாகிய அத்தாலியாள், யூதாவின் இராஜ்யத்தை ஆறு ஆண்டுகளுக்கு எடுத்துக் கொண்டாள். பிறகு, அவள் செய்த முதல் காரியம் "............ அவள் எழும்பி, யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் சங்காரம் பண்ணினாள்". (*II*நாளா: 22:10). ஆக, அவளாலே முதலாவது தன் கணவன் ( யோராம்), பிறகு தன் மகன் (அகசியா), அதன்பிறகு தானே இராஜ்யபாரத்தை எடுத்து, யூதாவின் மக்களை விக்கிரக வணக்கத்தில் அதிகமதிகமாக ஊறிப் போகும்படி செய்தாள்.

இவளுடைய, இந்த அளவுகடந்த தேவ விரோதச் செயலுக்குண்டான பெலன் எங்கிருந்து கிடைத்தது? சந்தேகத்திற் கிடமில்லாமல் "ஆகாப்" தான். எல்லாப் பொல்லாப்புக்கும் காரணமான தன் மனைவியாகிய யேசபேலை இவன் சகல காரியங்களுக்கும் சார்ந்திருந்த, பெலவீனமான, மோசமான மனிதனாக இருந்தான். நாபோத் திராட்சைத் தோட்டத்தை தன் அரமனைக்கான கொல்லைப்புறமாக இருக்க அதைப் பெற்றுக்கொள்ள முயன்று, கிடைக்காமல் போகவே வீட்டிற்குச் சென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். (*I* இராஜா. 21:4). யேசபேல் அவன் விரும்பினதை தன்னுடைய வழக்கமான பாணியில் பெற்றுக் கொடுக்கிறாள் எப்படித் தெரியுமா? நிரபராதியான நாபோத், தேவனுக்கும், ராஜாவுக்கும் விரோதமாக தூஷணம் சொன்னான் என்று பேலியாளின் மக்களை சாட்சியாக ஏற்படுத்தி அதன்மூலம் நாபோத் இரக்கமற்றமுறையில் கல்லெறியுண்டு சாகும்படி செய்கிறாள். அவன்

கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேட்டபோது, .......... "நாபோத் உமக்கு விலைக்கிரயமாய்க் கொடுக்கமாட்டேன் என்று சொன்ன திராட்சைத் தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக் கொள்ளும்.. ..........." என்று பெண்மைக்குச் சற்றும் சம்பந்தமில்லாத தொனியில் பேசுகிறாள். (வசனம். 15).

தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப் போட்ட ஆகாபுக்கும், அவனுடைய குடும்பத்துக்கும் விரோதமாகப் பேச தேவன் எலியாவை அனுப்பினபோது,"......... ஆகாப் தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின் மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டு, உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான். (*I* இராஜா. 21:27). ஆனால், யேசபேலோ, தேவனையும் அவருடைய தீர்க்கதரிசியையும் எதிர்த்து, எப்படியாகிலும் எலியாவைத் தேடிக் கண்டுபிடித்து கொன்று போடுவேன் என்று சபதமேற்கிறாள்.

யேசபேலின் விக்கிரக வணக்கம்" மற்றும் அவருடைய கெட்ட நடக்கைகள் அவளுடைய பிள்ளைகளை மாத்திரமல்ல, பிள்ளைகளின் பிள்ளைகளையும் பாதித்தது என்று பார்க்கிறோம், அவளுடைய பொல்லாத சந்ததியால் யூதாவின் மக்களும், இஸ்ரவேலின் மக்களும் தேவனுக்கு விரோதமாகக் கெட்டுப் போனார்கள். அவளாலே பல கொடுமையான மரணங்கள் நடந்து, குற்றமற்றவர்களின் உயிர்கள் சூரையாடப்பட்டது.

ஆகாப், யேசபேல் மற்றும் இவர்களின் குடும்பத்தாரின் பொல்லாங்குகளுக்கு விரோதமாக, தேவநீதி வெளிப்பட்டபோது, இவர்களின் சந்ததிக்கு விரோதமாக யெகூவை தேவன் எழுப்பினார். யோராம் இராஜாவாகிய யெகூவை கண்டவுடனே, யேகூவே சமாதானமா? என்றான். அதற்கு யெகூ: உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும், அவளுடைய பில்லிசூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது என்றான்". (*II* இராஜா. 9:32). இறுதியாக, அவள் தன்னுடைய வேலைக்காரராலே மேல் ஜன்னலிலிருந்து கீழே தள்ளப்பட்டு மரித்துப்போனாள். அவளுடைய சரீரத்தை நாய்கள் தின்றது. அவளுடைய பெயரும், பொல்லாப்பும் நகமும், சதையும் போல பிரிக்க முடியாததாகிவிட்டது. அவள் மரித்து இவ்வளவு ஆண்டுகள் ஆகியிருந்தும் கூட, யேசபேல் என்று பெயர் வைக்க யாருமே விரும்பமாட்டார்கள்.

கிறிஸ்தவ மனைவியாக, தாயாக இருக்கும்போது நாம் ஒன்றைக் கண்டிப்பாக மறந்துவிடக் கூடாது. நாம் செய்யும் ஒவ்வொரு

செயலும், அது நன்மையாக இருந்தாலும், தீமையாக இருந்தாலும் அதனின் தாக்கம் பல தலைமுறைகளுக்கு நீடித்திருக்கக் கூடியது. தேவனுக்குப் பயந்து நன்மையானவைகளை மாத்திரம் செய்யக் கற்றுக் கொள்வோம். அதன்மூலம், நம்முடைய பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் "தெய்வ பயத்தை" சொத்தாக சேர்த்து வைப்போம்.

Racheal Nayagam : Betty Choate.

# உயிர்த்தெழுதல்

அது ஒரு வெள்ளிக்கிழமை மாலை. ஓய்வு நாள் துவங்கி விட்டது. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு பிலாத்துவினிடத்தில் ஓடோடிவந்து, கிறிஸ்துவை அடக்கம் பண்ண அவர் சடலத்தை கொடுக்க அனுமதி கேட்டான். கந்தவர்க்கங்களை நிக்கேதேமு கொண்டுவர, யோசேப்பு துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சரீரத்தைச் சுற்றி, அவசரமாக எடுத்துச் செல்லுகின்றனர். சூரியன் அஸ்தமிக்கும் நேரம் நெருங்கி, எல்லாம் வேலையினின்று ஓய்ந்திருக்கும் புதிய ஓய்வு நாள் துவங்கிவிட்டதை அறிவித்தது, யோசேப்பின் சொந்த கல்லறையிலே இருவரும் சேர்ந்து இயேசுவின் சரீரத்தை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப்புரட்டி வைத்துப் போனார்கள்.

இயேசுவை வைத்த இடத்தை மகதலேனாமரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள். பின்பு எல்லோரும் தங்கள் வீட்டிற்கு திரும்பி சென்றார்கள். சனிக்கிழமை மாலை, ஓய்வு நாளான பின்பு, மகதலேனாமரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் கிறிஸ்துவின் சடலத்திற்கு சுகந்த வர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு வந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை, வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது, அவர்களும், மற்றவர்களுடனே கல்லறையினிடத்தில் வந்து, கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். அந்தக்கல் மிகவும் பெரியதாயிருந்தது.

அதிகாலையில் பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து வாசலில் இருந்த கல்லை புரட்டித்தள்ளியது அவர்களுக்கு தெரியாததினாலே அப்படி சொன்னார்கள். மகதலேனாமரியாள், அந்த கூட்டத்திலே இளவயதினளாக இருந்திருக்கலாம். ஆகவே கல்லறையினிடத்தில் முதன்முதலாக வந்து

சேர்ந்ததும் இவளே. இவளிடத்திலிருந்துதான் தேவன் 7 பிசாசுகளைத் துரத்தினார். இவள் கல்லறையினிடத்தில் வந்தபொழுது இன்னும் இருட்டாக இருந்தது. இவள் கல்லறையை ஏறிட்டுப் பார்த்தபோது, கல்தள்ளப்பட்டிருக்க கண்டாள். கல்லறையும் காலியாக இருந்தது. சரீரமும் காணவில்லை. என்ன செய்வதென்றறியாது, அவள் பேதுரு யோவான் இவர்களிடத்தில் ஓடிச்சென்று "கர்த்தரை கல்லறையினின்று எடுத்துப் போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் தெரியவில்லை" என்றாள்.

சூரியன் உதயமாகும் வேளை, மற்ற பெண்களும் வர கல்லறை திறந்து இருப்பதையும் சடலம் அங்கு இல்லாதிருப்பதையும் கண்டனர். அவர்கள் கலக்கமடைந்திருக்கையில் பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த இரண்டு பேர் அவர்களை நோக்கி, உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார் என்றனர். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கையில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையிலறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும் என்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் இவர்களுக்கு சொன்னதை நினைவு கூர்ந்தார்கள். பின்பு அவ்விடம் விட்டு இந்த சங்கதிகளை அப்போஸ்தலர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள். பேதுருவும், யோவானும் ஓடிவந்து, மகதலேனாமரியாள் சொன்னது உண்மையா என்று பார்த்தார்கள்.

யோவான், இளையவனானதால் முதலில் ஓடிவந்து, கல்லறையினுள் எட்டிப்பார்த்தான். ஆனால் பேதுருவோ உள்ளே சென்று, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். இயேசு வெறும் மயக்கம் அடைந்தார், மரிக்கவில்லை, ஆகவே கல்லறையில் மூர்ச்சை தெளிந்து எழுந்து ஓடிவிட்டிருக்கலாம் என்று சிலர் கூறும் கூற்றுக்கு இதுவே சவால். பேதுரு கல்லறையினுள் பார்த்த நிலையில் யாரும் இயேசுயின் சடலத்தை திருடிக்கொண்டு அவசரமாக ஓடி இருக்கமுடியாது. பிறகு யோவானும் உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்.

பின்பு அந்த சீஷர்கள் தங்களுடைய இடத்திற்கு திரும்பிப் போனார்கள். மரியாள் கல்லறையினருகே நின்று அழுது கொண்டிருந்தாள். அழுது கொண்டே குனிந்து கல்லறைக்குள் பார்த்த பொழுது இரண்டு வெள்ளுடை தரித்த தேவதூதர்களைக் கண்டாள். அவர்கள் ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள் "என் ஆண்டவரை எடுத்துக்

கொண்டு போய் விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்றாள். இவைகளைச் சொல்லி பின்னாகத் திரும்பி இயேசு நிற்கிறதைக் கண்டாள்.

அதற்குப்பிறகு இயேசு மற்ற ஸ்திரீகளுக்கு தரிசனமானார். அவர்களைப் போய் தம்முடைய சீஷர்களுக்கு அறிவிக்கும்படி கூறினார். இயேசு தம்முடைய வாழ்விலும், சாவிலும் தம்போடு கூட இருந்து ஊழியம் செய்த ஸ்திரீகளுக்கே முதல் இரண்டு சந்தர்ப்பங்களிலும் தரிசனமானார். இயேசு உயிர்த்தெழுந்த நாளில் வேறொரு சந்தர்ப்பத்தில் பேதுருவுக்கு தரிசனமானார். பேதுரு எவ்வளவு மனந்திரும்பிய நிலையில், இயேசுவினுடைய மன்னிப்பை உணர்ந்திருந்தான் என்று அறிவதற்காக இருக்கலாம்.

அதே நாளில், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் எம்மாவுக்கு போன இரண்டு சீஷர்களுக்கு தரிசனமானார். "அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே. கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்க தரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்கா 24:25–27).

இந்த இருவரும் உடனே எருசலேமுக்குத் திரும்பிப்போய், பயந்து கொண்டிருந்த அந்த 11 சீஷர்களுக்கும் தாங்கள் கண்டவற்றை அறிவித்தனர். இதற்கு முன்பு மகதலேனாமரியாளும் இயேசு உயிர்த்தெழுந்ததை அறிவித்தாள். இன்னும் அவர்கள் அதை நம்பவில்லை என்று மாற்கு கூறுகிறார் (மாற்கு 16:13). கல்லறை காலியாக இருந்தும், அவர்கள் இயேசு சரீரத்திலே நடக்க முடியாது என்று தான் எண்ணியிருந்தார்கள். திடீரென்று இயேசு வந்து நடுவே நின்று, "உங்களுக்கு சமாதானம் என்றார்" (லூக்கா 24:36).

தம்மை அவர்கள் விசுவாசிக்காமற் போனதினிமித்தம் இயேசு கடித்து கொண்டு, நான்தான் என்று அறியும்படி என் கைகளையும், கால்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் என்னைக் காண்கிறபடி எனக்கு மாம்சமும், எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல, ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி தம்முடைய கைகளையும், கால்களையும் அவர்களுக்கு காண்பித்தார் (லூக்கா 24:39, 40). பிறகு பொரித்த மீனை அவர்களிடத்தில் வாங்கி சாப்பிட்டார். தோமா அப்பொழுது அங்கு இல்லை. "அடுத்த முறை அவன் இயேசுவை தொட்டுப்

பார்த்து பிறகு விசுவாசித்தான்"(யோவான் 20:26–29). தோமா மாத்திரம் அல்ல. அவரை தனிப்பட்ட முறையில் சந்திக்கும்வரை யாரும் நம்பவில்லை.

## இயேசு கலிலேயாவில் தரிசனமாதல்:–

தாம் மரிக்குமுன், இயேசு கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்கு போகும்படியாக சீஷர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். காலியான கல்லறையையும், தேவதூதனையும் கண்ட ஸ்திரீகள், கலிலேயாவுக்கு போகும்படி சீஷர்களுக்கு இயேசு சொன்னதாக அறிவித்தார்கள். கலிலேயாவில் இரண்டு முறை தரிசனமானார். அதில் ஒரு சந்தர்ப்பத்தில் 7 சீஷர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் இது 3–வது முறை சீஷர்களுக்கு தரிசனமாவது. இன்னும் ஒர முறை சுமார் 500–க்கு அதிகமான பேருக்கு தரிசனமானார்.

பவுல் 1 கொரிந்தியர் 15–ம் அதிகாரத்தில் இயேசு யாக்கோபுக்கு தரிசனமானார் என்று கூறுகிறார். இவர் இயேசுவின் சகோதரர். எழுதப்பட்ட இயேசுவின் கடைசி தரிசனம் (அப்போஸ்தலர் 4:9) இந்த விதமாக தேவக்குமாரன் உயிர்த்தெழுந்தார். நாம் இதன் மீது முழு விசுவாசத்தை வைக்கலாம். அவரைக் கண்டவர்கள் எழுதிய சாட்சியங்கள் நமக்குண்டு. எருசலேமிலே என்ன நடந்தது என்பதை காட்ட சரித்திர சான்றுகள் உண்டு. இயேசுவின் உயிர்த்தெழுதலை சீஷர்கள் தவறாக புரிந்து கொண்டிருப்பார்களானால், ரத்தச்சாட்சிகளாக மரித்து இருக்க மாட்டார்கள்.

இயேசு உயிர்த்தெழவில்லையெனில், சபை ஒரு பிரயோஜனமில்லாதது. இவ்வுலகத்திலும், ஒரு நம்பிக்கை இல்லை. மறுமையிலும் ஒரு நம்பிக்கையுமில்லை. ரத்தச்சாட்சிகளாக மரித்தவர்கள் முட்டாள் தனமாக மரித்திருப்பார்கள். கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் எந்த மதிப்பும் இல்லை. இயேசு உயிர்த்தெழவில்லை என்றால், அவர் தேவனுடைய குமாரன் இல்லை. அவர் ஒரு மோசக்காரர் என்று அர்த்தம். இயேசு தேவனுடைய குமாரன் இல்லை என்றால் ரட்சிப்பும் இல்லை. பாவமன்னிப்பும் இல்லை. ஒன்றும் இல்லை. உயிர்த்தெழுதலைப் பற்றிய சத்தியம், வேதாகம சத்தியம் அவர் உயிர்த்தெழுந்ததினால், நாம் மரணத்தினின்று ஜீவனுக்குட்படுத்தப் பட்டிருக்கிறோம். இருளிலிருந்து, வெளிச்சத்திற்கு வந்திருக்கிறோம். தேவனுடைய ஞானத்திலும், வல்லமையிலும் நமக்கு நம்பிக்கை உண்டு.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். ஆகையினால் இன்று உலகத்தை ஆளுகிறார். நாமும் அவரை ஆராதிக்கிறோம். ஜீவனுள்ளவரையே ஆராதிக்கிறோம். 1 கொரிந்தியர் 15:12–20–ல் பவுல் கூறுவதாவது, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின்

உயிர்த்தெழுதல் இல்லையென்று உங்களில் சிலர் எப்படி சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் பிரசங்கமும் விருதா. உங்கள் விசுவாசமும் விருதா.

மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனை குறித்துச் சாட்சி சொன்னதினாலே தேவனுக்காகப் பொய் சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாக இருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலே இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்தால் எல்லாம் மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர்.

பி.ஆர்.எஸ்.

பெங்களூர்.


## "சத்திய வழி" நற்செய்திக் கூட்டங்கள்

நாள் : மே மாதம் 5, 6, 7
(வியாழன், வெள்ளி, சனி)

நேரம் : மாலை 6 மணி

இடம் : 5A, மேலப் பொன்நகர்
3வது தெரு, மதுரை.

**செய்தியாளர்கள் :**

Bro. P.R. SWAMY (வானொலிப் பேச்சாளர்)

Bro. R.V. DUGLUS, (பெங்களூர்.)

**மேலும் விபரங்கட்கு!**

Bro. P.C. பிலமோன் ராஜா
தபால் பெட்டி எண் 11, அரசரடி,
மதுரை – 625 010

# இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

அப்போஸ்தலர்களுடைய காலத்திலும், அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்ததினால் அற்புத வரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் காலத்திலும் அற்புத, அடையாளங்கள் நடந்ததாக வசனங்கள் கூறுகிறது. (அப்5:12–16 & 6:5–7, 8:4–8). அதேபோல் இன்றைக்கும் அற்புதங்கள் நடக்கிறது என்று வாதிடுபவர்கள் தங்கள் நிலைக்கு ஆதரவாக, எபி.13:8–ஐப் பயன்படுத்துகின்றனர். அந்த வசனம் கீழ்வருமாறு சொல்கிறது. "இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். இயேசுக் கிறிஸ்து, தனது தெய்வீக வல்லமையினால் அற்புதங்கள் செய்ததைப் போலும், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதினால் அற்புத. அடையாளங்கள் நிகழ்த்தியதைப் போலும், இன்றைக்கும் முடியும் என்கின்றனர். அதற்கு ஆதாரமாக, இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்கின்றனர்.

இப்பொழுது. இயேசுக் கிறிஸ்துவைப் போலவே, தேவனும் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. ஆனால், தன்னுடைய இந்தத் தன்மையை நிரூபிப்பதற்கு, தேவன் இன்று மீண்டும் மனிதனை பூமியின் மண்ணிலிருந்து சிருஷ்டிக்கவோ, மனுஷியை மனிதனின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கவோ தேவையில்லை. ஆதியிலே, வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த பொழுது அப்படித்தான் செய்தார். அந்த தேவன் இன்றும் மாறவில்லை. மறுபடியும், அதைப்போலவே செய்ய வேண்டுமெனில் அவராலே செய்து காட்ட முடியும். ஆனால், அவர் தன்னை தேவனென்று நிரூபிக்க அப்படிச் செய்வதில்லை.

தேவன் மனிதன் மீது கொண்டிருந்த அன்பில் இன்றும் மாறாதவராகவே உள்ளார். ஆதியிலே அவர் மனிதனை நேசித்ததைப் போலவே, இன்றும் எல்லா மனிதனையும் நேசிக்கிறார். மனிதன் எப்பொழுதும். தனக்கு பயந்து, தன்னுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்பினார். அவர் எப்பொழுதும் மனிதனிடத்தில் பேசி தன்னுடைய சித்தத்தை வேதாகமத்தின் மூலம் வெளிப்படுத்தினார். அவருக்கு கீழ்ப்படிகிறவர்களை எப்பொழுதும் ஆசீர்வதிக்கவும், கீழ்ப்படியாதவர்களை தண்டிக்கவும் செய்தார். அவர் தன்னுடைய வாக்குத்தத்தங்களையோ மனிதனோடும், மனுஷியோடும் தனக்குள்ள உறவையோ அவர் ஒருபோதும் மாற்றிக்கொள்ளவில்லை. எப்படி தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராகவே உள்ளாரோ, அதைப் போலத்தான் இயேசுக் கிறிஸ்துவும்!

எல்லா மனிதரையும் தன் உயிரினும் மேலாக நேசித்து,

எல்லோருக்காகவும் உயிர்நீத்த இயேசுக் கிறிஸ்து மாறாதவராகவே உள்ளார். எல்லோரும் மனந்திரும்பி அவருடைய பிள்ளையாக மாறவேண்டுமென்று விரும்புகிறவர் அவரே. (*II* பேது 3:9). தான் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த மெய்யான தேவனுடைய குமாரனென்று நிரூபிப்பதற்காக, பூமியில் இருந்தபொழுது, சீஷர்களுக்கு முன்பாகவும், மற்றவர்களுக்கு முன்பாகவும் அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். *பின்னாளில் அவர் பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்கள் மீது அனுப்பினார். அவர்கள் தங்கள் பிரசங்கத்தைக் கேட்கத் திரண்டு வரும் கூட்டத்திற்கு முன்பாக அற்புத அடையாளங்களைச் செய்தார்கள். அதன் மூலம் அவர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்களென்றும், அவர்கள் பேசுவது தேவனுடைய கட்டளைகள் என்றும் தெரிய வந்தது.* (யோவா 14:25–26; யோவா 16:7–15, அப். 1:1–8; அப்.2:1–4; அப்.5:12–16). பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே, அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் பெற்று புதிய ஏற்பாட்டை எழுதிக் கொடுத்தார்கள். அதன்மூலம் இயேசுக்கிறிஸ்து செய்த காரியங்களை அறியவும், விசுவாசிக்கவும், எல்லோருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்க வந்தார் என்பதை அறியவும் முடிந்தது. அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய யோவான் இவ்வாறாக எழுதியுள்ளார். *"இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவா 20:30–31).* அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும்பொழுது, "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்கிறார் (ரோம 10:17).

இயேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், நாளையும் மாறாதவராக இருக்கிறார். ஆனால் அவர் தன்னை யாரென்று நிரூபிக்க, அற்புதங்களையும், அடையாளங்களையும் தொடர்ந்து செய்து காட்டத் தேவையில்லை. *முதலாம் நூற்றாண்டுக் காலத்தில், ஏற்கெனவே செய்யப்பட்ட அற்புத அடையாளங்கள், அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றும், எல்லோருக்கும் இரட்சகர் என்பதையும் சந்தேகத்திற்கிடமின்றி உறுதி செய்து விட்டது.* அவைகளை இன்று நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்க முடியும். அவைகளைப் படித்து அவரை விசுவாசிக்கவும், உலகத்தின் பாவத்தை எடுத்துப்போட சிலுவையில் மரித்த, தேவனுடைய மெய்யான குமாரனென்றும் அறிந்து கொள்ள முடியும்.

இவைகளை நாம் சொல்லும் பொழுது, சிலர் உடனே யோவான்

*"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்:நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்".* இயேசுக் கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து பரமேறினதற்குப் பிறகு, அவருடைய சீஷர்கள் அவர் செய்ததைப் போலவே அநேக அற்புதங்களைச் செய்தார்களென்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இயேசுக்கிறிஸ்து செய்ததைக் காட்டிலும் பெரிய காரியங்களையும் கூடச் செய்தார்கள். அது என்ன? இயேசுக்கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். ஜனங்கள் அதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டபொழுது, தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குண்டான நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டார்கள்.

இயேசுக் கிறிஸ்து பூமியிலிருந்த பொழுது, திரளான ஜனங்களை அப்பத்தினாலும், மீனினாலும் போஷித்தார். மரித்தவர்களை உயிரோடே எழுப்பினார். பார்வையற்றவர்களுக்கு வெளிச்சத்தையும், முடமானவர்களுக்கு கால்களையும் கொடுத்தார்; பலவிதமான வியாதிகளில் சிக்கி சீரழிந்து கொண்டிருந்த மக்களை, அவராலே குணப்படுத்த முடிந்தது; இவையெல்லாவற்றையும் செய்து, தான் தேவனுடைய குமாரனென்று மீண்டும், மீண்டும் நிரூபித்தார். ஆனால், *அவருடைய மரணம், பிறகு உயிர்த்தெழுதல் இவைகளுக்குப் பிறகு தான், அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய இரட்சிப்பை அருளுவதற்குக் காரணரானார்.* (எவி.5:8,9)

இப்பொழுது கவனியுங்கள். பார்வையுற்ற ஒருவருக்கு பார்வை அளிப்பதோ, கால் இல்லாதவனுக்குக் கால் கொடுப்பதோ, சூம்பின கையை குணமாக்குவதோ, இன்னும் இப்படிப்பட்டதான அற்புதங்களைச் செய்வதோ அல்லது பாவத்தின் காரணமாக நித்திய நரகத்திற்கு செல்லும் ஒருவனை இரட்சிப்பதோ, எது பெரியது? இந்த இடத்தில் இயேசுக் கிறிஸ்துவே என்ன போதித்தார் என்பதைக் கவனிப்பது நல்லது. "உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் (மாற் 9:45). *இந்த வசனத்தை யோவான் 14:12 உடன்பொருத்திப் பார்த்தால், இரண்டுக்குமுள்ள தொடர்பு விளங்கும். அவரை விசுவாசிப்பவர்கள் அவரைவிடப் பெரிய காரியங்களைச் செய்வார்கள் என்பதின் பொருள் இதுதான்.*

உலகத்தின் பாவத்தை எடுத்துப் போடும்படியாய் இயேசுக்கிறிஸ்து மரித்தபடியால், இன்று நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்

நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். மறுபடியும் கர்த்தர் சொல்வதைக் கவனியுங்கள், "மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஒருவனுக்கு சரீரத்தில் அநேகவிதமான வியாதிகள் இருந்து, சுகவீனமான நிலையில் மரித்தாலும், வேத வசனங்களில் சொல்லியுள்ளபடி இயேசுக் கிறிஸ்துவின் இரட்சிப்பின் திட்டத்துக்குக் கீழ்ப்படிந்து மரித்தால், பரலோகம் செய்வோம் என்ற நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் (மாற்16:16, அப் 2:38 ரோம.8:1). வேறொருவன் திடகார்த்தமான சரீரத்தோடு வாழ்ந்து, இரட்சிப்பின் திட்டத்திற்கு கீழ்ப்படியாமல் மரித்தால் நித்திய நரகத்திற்குத் தான் செல்ல வேண்டியிருக்கும். இப்பொழுது மறுபடியும் கேட்கிறேன் எது பெரியது? சரீர சுகமா? ஆவிக்குரிய சுகமா? இன்றைக்கும் இயேசுக் கிறிஸ்துவை சரீரத் தேவைகளான அப்பத்திற்காகவும், மீன் துண்டுகளுக்காகவும் தேடுகிறவர்கள் இருக்கிறார்கள். சரீரத் தேவையான அப்பத்திற்காகத் தன்னைத் தேடினவர்களை குறித்து, இயேசுக்கிறிஸ்து எப்படி கடிந்து கொண்டார் என்பதைக் கவனியுங்கள். "அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்". (யோவ 6:27)

சரி, இப்பொழுதாவது புரிந்து கொண்டீர்களா? எது முக்கியம் என்று. ஆவிக்குரிய காரியங்கள் தான் முக்கியம். அவைகளைத் தேடுவோம். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம்!

EZSR

சன்னி டேவிட்.

## கர்த்தர் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்கள் ஏழு

(1) நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்

(2) நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.

(3) உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்.

(4) நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

(5) உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்.

(6) உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்.

(7) பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்

# வேதாகமத்தை பகுத்துப் படிப்பது எப்படி?

வேதாகமத்தை பகுத்துப் படிப்பது எப்படி? என்ற கேள்விக்கு வேதாகமத்தின் மூலம் விடை காணலாம். இன்று அநேக பிரிவினைச் சபைகள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் இருப்பின், வேதத்தைப் பகுத்துப் படிக்காமல் இருப்பதே முக்கிய காரணமாக உள்ளது. வேதத்தை பகுத்துப்படித்தல் என்றால் குழம்பிக் கொண்டு படிப்பதல்ல. புரிந்து கொண்டு படித்தல். ஒன்றையும் கூட்டாமல், குறைக்காமல் படித்தலே பகுத்துப் படித்தலாகும். நாம் பகுத்துப் படிக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார் (ரோமர் 12:2, எபி 5:15.2 தீமோ 2:15)

பரிசுத்த வேதாகமம் என்றால் புத்தகங்கள் அடங்கிய புத்தகம் என்பதாகும். உலகிலேயே மிக உன்னதமான நூல் எது என்றால் அது பரிசுத்த வேதாகமம் தான். இன்று கூட எந்த புத்தகத்தையும் விட மிக்வும் அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருப்பது வேதாகமம் மட்டுமே.

வேதாகமம் ஒரு கற்பனைக் காவியமல்ல. உண்மைச் சம்பவங்களைக் கூறும் ஒப்பற்ற தேவனுடைய வார்த்தைகளாகும். வேதத்தில் கூறப்படும் இடத்தின் பெயர், மலைகளின் பெயர், நதிகளின் பெயர் அனைத்தும் இன்றும் அப்படியே இருக்கிறது. வேதாகமம் நமது நல்வாழ்விற்கு வழிகாட்டியாக இருக்கிறது. இதை நேசித்து, பகுத்துப் படித்து கீழ்படிவதே நமது கடமையாகும்.

பரிசுத்த வேதாகமம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவையே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனப்படும். வெகு காலத்திற்கு முன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலர்களுக்கு அளிக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தைப் பற்றி பழைய ஏற்பாடு பேசுகிறது. 'ஏற்பாடு' என்றால் உடன்படிக்கை (or) ஒப்பந்தம் எனப்படும். புதிய ஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கை பழைய உடன் படிக்கையை மாற்றிப்போட்டு சர்வ உலகத்தாருக்குமாக அளிக்கப்பட்ட புதிய கட்டளை ஆகும். இதற்கு ஆதாரமாக யாத் 34:27, 28ல் "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி இந்த வார்த்தைகளை நீ எழுது. இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலரோடும் உடன்படிக்கை பண்ணினேன் என்றார். அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும், பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான். அவன் பத்துக் கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப்பலகைகளில் எழுதினான்!!

கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை ஏகிப சுவிசேஷம் உலகமெங்கும் [illegible]

பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. (மாற் 16:15,16) இன்று நாம் கீழ்படிய வேண்டியது புதிய கட்டளையாகிய சுவிசேஷத்திற்கே!பழைய கட்டளையாகிய நியாயப் பிரமாணம் நமக்கு போதனைக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 15:4)

பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும். புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் ஆக மொத்தம் 39+27=66 புத்தகங்கள் உள்ளடங்கிய புத்தகமே வேதாகமம். இது ஒரு ஒப்பற்ற நூலகமாகக் கருதப்படுகிறது. நூல் நிலையத்தில் பல்வேறு நூல்கள் இருப்பது போன்று பரிசுத்த வேதாகமத்திலும், நியாயப் பிரமாணம் 5 புத்தகம், சரித்திரம் 12 புத்தகங்கள் பாடல் 5 புத்தகம், தீர்க்கதரிசனம் 17 புத்தகங்கள் ஆகியவை பழைய ஏற்பாட்டிலும். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு (4) புத்தகம் சரித்திரம் (1) புத்தகம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கென்று (21) நிருபங்கள். தீர்க்கதரிசனம் (1)புத்தகம். இப்படி பல்வேறு புத்தகங்களைக் கொண்டதே பரிசுத்த வேதாகமம். பழைய ஏற்பாடு எபிரெயு மொழியிலும். புதிய ஏற்பாடு கிரேக்கு மொழியிலும் எழுதப்பட்டது.

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டதாக இருந்தாலும். எல்லோரும் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள். இந்த வேதத்தில் பல புத்தகங்களும் அற்புதமான முறையில் ஒன்றாக இருக்கின்றன. ஒன்றையொன்று மறுதலிப்பதில்லை. ஒரு சங்கிலித் தொடர்போல கோர்வையாக இருப்பதைக் காணலாம். ஒருவர் எழுதியதை மற்றவர் தவறு என்று கூறுவதில்லை. இது தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்ற உண்மைக்கு இது ஒரு நல்ல ஆதாரமாக இருக்கிறது. வேறு எந்த நூலிலும் இப்படிப்பட்ட அதிசய ஒற்றுமையை நாம் காணமுடியாது.

மனிதன் படைக்கப்பட்ட விதத்தையும். உலகம் எப்படி உண்டாயிற்று என்பதையும் தெளிவாகக் கூறும் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமமே! மனித வாழ்க்கையின் அவசியத்தையும் மரணத்திற்குப் பின் என்ன? என்ற வினாவிற்கு சரியான விடையையும் அளிப்பது வேதாகமம் மட்டுமே. மனிதனின் நல்லகுணங்களை எடுத்துக்காட்டுவதுடன் மனிதனின் தீயசெயல்களையும் சுட்டிக்காட்டுகிறது. கடந்த காலம். நிகழ்காலம், இனிமேல் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளையும் மிக துல்லியமாக கூறும் ஒப்பற்ற புத்தகம் இந்த வேதாகமம். இந்த புத்தகத்தில் காணப்படும் பற்பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளன. எதிர் காலத்திலும் நம்மை நியாயம் தீர்க்கும் புத்தகம் இதுவேதான்! (யோவான் 12:48)

இந்த பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக தேவன் மனிதனுடன் பேசுகிறார். இதன் மூலமாக தேவன் தம் குமாரனை உலகிற்கு வெளிப்படுத்தி. தன்னுடைய சித்தத்தையும். மனித ஜாதிக்கு வெளிப்படுத்துகிறார். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படிவோர் யாவருக்கும் இங்கே வெற்றி நிச்சயப்படுத்தப்படுகிறது.

இந்த வேதபுத்தகம் நமது வாழ்விற்கு போதுமானதாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதிபடுத்துகிறது. (2 தீமோ 3:16,17) தேவ வசனத்தைப் பற்றிப் பேசும்போது சத்தியம் என்று இயேசு கூறினார் (யோவான் 8:32, 17:17) இந்த சத்தியமே நம்மை விடுதலையாக்கும். நாம் தேவனுடைய வசனங்களின் படி பேச வேண்டும். (1 பேதுரு 4:11) அதாவது நம் போதனை வேதவாக்கியங்களின்படி இருக்க வேண்டும். நாம் வேதவசனங்களை பகுத்துப் படிக்க வேண்டும். (2 தீமோ 2:15) நாம் வேத வசனங்களை தினந்தோறும் ஆராய வேண்டும். (யோவான் 5:39), (அப். 17:11) மேலும் நாம் இந்த வேத வசனத்திலிருந்து எதையும் எடுத்துப் போடாமலும், கூட்டாமலும் இருக்க எச்சரிக்கப்படுகிறோம். (வெளி 22:18,19)

ஆம், உண்மையாகவே இந்த பரிசுத்த வேதம் உலகிலேயே மிக உன்னதமான நூல்! இதற்கு நாம் கீழ்படிந்தால் ஆசீர்வதிக்கப்படுவோம்!

-சகோ. பாஸ்கர் கோவில்பட்டி

# சபையில் அங்கம் வகிப்பது அவசியமா?

இழந்து போனவர்களை இயேசு இரட்சிக்கிறார் (லூக். 19:10). இரட்சிப்படைய் சபை அவசியந்தானா? "சபை நல்லது" தான்; ஆனால் இரட்சிப்புக்கு அது முக்கியமல்ல" என பலர் எண்ணுகின்றனர். மனிதன் உருவாக்கிய போலி சபையைப் பற்றி இவ்வாறு எண்ணினால், நாம் வருத்தப்படமாட்டோம். ஏனெனில் அவைகள் மக்களை வஞ்சிப்பதற்காக பிசாசால் ஏற்படுத்தப்பட்டவைகள். இப்படிப்பட்ட கூட்டங்களைப் பற்றியே இயேசு கூறினார். "என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்"(மத்.15:13). இயேசு கட்டிய சபையைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்த்தால் (மத்.16:18) ஒரு மாறுபட்ட பதில் நமக்குக் கிடைக்கிறது.

கிறிஸ்துவின் ஒரே உண்மையான சபைக்குப் புறம்பே இரட்சிப்பு இல்லை. இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சபையில் சேர்க்கிறார்.(அப்.2:47). கிறிஸ்து சரீரத்திற்கு (சபைக்கு) இரட்சகராயிருக்கிறார். (எபே.5:23).

தனது இரத்தத்தினால் கிறிஸ்து சபையை சம்பாதித்துக் கொண்டார் (அப்.20:28). சபையின்றி ஒருவன் இரட்சிப்படைய கூடுமானால், கிறிஸ்துவின் இரத்தமின்றியும் அவன் இரட்சிப்படையக் கூடும்.

சவுல் சபையைத் துன்புறுத்தினான் (1கொரி. 15:9). இயேசு கேட்டார்; "சவுலே, ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?" (அப்.9:4) சபையைத் துன்புறுத்துவது அவரையே துயரடையச் செய்வதாக இருந்திருக்கிறது

என்றால் சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பின் நெருக்கத்தை நாம் ஊகிக்க முடியும்;

"கிறிஸ்துவாலேயே இரட்சிப்பு உண்டு"(2 தீமோ.2:10). ஒருவன் "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்" பெறுகிறான். (கல.3:27). ஞானஸ்நானம் ஒருவனை ஒரே சரீரமாகிய சபைக்குள் இணைக்கிறது. (1கொரி. 12:13). எனவே, கிறிஸ்துவுக்குள் ஒருவன் ஞானஸ்நானம் பெறும் போது அவன் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறான்.

மக்கள் பொதுவாக எண்ணிக் கொண்டிருப்பது போல,"சர்ச்" என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சபையானது ஒரு கட்டிடமோ, ஒரு நிறுவனமோ அல்ல. சபை என்பது இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டம். 'எக்லேசியா' என்று கிரேக்க பதத்தின் மொழியாக்கமே சபை எனப்படுவது. 'எக்லேசியா' என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' என பொருளாகும். பாவ வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் ஐக்கியப்பட்ட ஒரு வாழ்க்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்பதே புதிய ஏற்பாட்டில் சபை என்ற வார்த்தையின் பொருளாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சபையில் அங்கம் பெறாதவர்கள் இரட்சிக்கப்பட்ட மக்களாக இருக்க முடியாது.

சபை பற்றி கூறப்படும் பல வார்த்தைகள் சபையின் முக்கியத்துவத்தை நமக்குப் புரிய வைக்கின்றன.

- சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி (எபே 5:22–23).
- சபையானது கிறிஸ்துவின் இராஜ்ஜியம் (கொலோ1:13)
- சபையானது அவருடைய சரீரம் (1 கொரி 12:28)
- சபையானது அவருடைய குடும்பம் (1 தீமோ 3:15)

இரட்சிக்கப்பட்டவர்களே சபை எனப்படுவோர். இரட்சிப்படைய கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க வேண்டியது அவசியமாகும். அவருடைய சபைக்குப் புறம்பாக இரட்சிப்பு இல்லை. வேதாகமத்தில் காணப்படும் அந்த உண்மையான ஒரே சபையில் நீங்கள் அங்கத்தினரா?

SSR ஜான்வேடி

## சோதனையா? கவலைப்படாதீர்கள்

*அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் II பேதுரு 1:7*

# வழி நடத்துபவராக ஒரு பிரசங்கியார்.........

வழி நடத்துதலில் ஒரு பிரசங்கியார் இரண்டு வேலைகளைச் செய்கிறார் *(PULPIT PREACHER)* மேடைப் பிரசங்கியாராக இருக்கும்போது, அவர் பிராந்திய சபையில் ஒரு முக்கியமான இடத்தினை வகிக்கிறவராக இருக்கிறார். வழிநடத்துதலின் இரண்டாவது வேலையானது அவர் அதிகாரத்தில் கட்டுப்பாடுள்ளவராக இருக்கிறார்; அதிகமான அதிகாரம் மூப்பர்களிடத்தில் தான் இருக்கின்றன. அதனால், ஒரு முக்கியமான வழிநடத்துபவராக இருப்பதினால் அனேகப் பிரச்சனைகளை அவர் எதிர்நோக்குகிறார். இருந்தாலும், அவர் மூப்பர்களோடு கலந்து ஆலோசித்து நடந்தால் அனேகப் பிரச்சினைகள் எழ வாய்ப்பு இருக்காது.

அனேகப் பிரசங்கியார்கள் சபை வளர்ச்சிக்குத் தங்களைத் தாங்களே சிறந்த முறையில் தயாரித்துக் கொள்வதில்லை. சபை வளர வேண்டுமென்றால் ஒரு பிரசங்கியார் சபை எப்படி வளர வேண்டும் என்கின்ற எண்ணத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அவருடைய அநேக வருடப் பயிற்சியில் இதைப்பற்றி அவர் கற்றுக் கொள்ளாவிட்டால் இந்தக் காரியத்தைக் குறித்து அவர் ஆழமாக கற்றுக்கொள்ள வேண்டும். வேதாகமத்தை அவர் தொடர்ந்து வாசித்து வசனங்களுக்கு ஏற்றவாறு அவர் வாழ்ந்து தனக்குள் இருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஆர்வத்தை அவர் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேடைப்பிரசங்கம், நோயாளிகளை சந்தித்தல், இளைஞர்களுக்குத் திருமணம் செய்து வைத்தல், இறந்தவர்களை அடக்கம் செய்தல் ஆகியக் காரியங்களைக் கொண்ட பழையத் தத்துவத்தை ஒரு பிரசங்கியார் பின்பற்றினால், நிச்சயமாக அவர் சபையை வளர்க்க முடியாது. இப்படிப்பட்ட காரியங்கள் ஒரு பிரசங்கியாருடைய முக்கியமான நோக்கங்களாக இருக்க முடியாது. ஒருசில பிரசங்கியார்கள் மட்டுமே சபையை வளர்க்க முடியும் என்பது தெளிவாக இருக்கிறது. அநேகர் அல்ல.

சிறிய பிராந்திய சபைகளை பெரியவைகளாக வளர்க்கவும். கூட்டவும் திறமையுள்ள மனிதர்களே நமக்குத் தேவை.

பெரிய பிராந்திய சபைகளுக்கு பிரசங்கிக்கக் கூடிய சில பிரசங்கியார்களுக்கு சபையை வளர்ச்சியடைந்த நிலைக்குக் கொண்டு வர திறமையில்லையென்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது

ஒரு பிரசங்கியார் தேவனுடைய வேலையை செய்கின்ற தேவனுடைய மனிதனாக தான் இருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட மனிதானாகிய யோவான் ஸ்நானகனைப் பற்றி இப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது (யோவான் 1:6) மனிதர்களுக்கு பணிபுரியவும், பிராந்திய சபைக்காக வேலை செய்வதைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்தாரானால் ஒருவேளை சோர்ந்து போகும்போது அவர் ஊழியம் செய்வதை மறந்துவிட நேரிடும். ஒருவர் தான் தேவனுக்காக வேலை செய்வதை மற்றும் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை செய்து முடிப்பது பற்றி மனதில் கொண்டிருந்தால் அவர் தேவனுக்காகவே நேரத்தை செலவிட முடியும். தேவன் எங்கே வழி நடத்துகிறாரோ அந்த இடத்தில் அவர் ஒரு வேலையை செய்ய முடியும். அவர் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். மேலும் கிறிஸ்து அவருக்குக் கொடுத்துள்ள வேலையில் உண்மையுள்ளவராக இருக்க வேண்டும்.

பலன் தராத பிராந்திய சபைகளில் அனேக பிரசங்கியார்கள் அடிக்கடி தொடர்பு கொள்கிறார்கள். மேலும் ஒரு மாற்றத்தையும் விரும்புவதில்லை. ஒரு பிரசங்கியாரின் வாழ்க்கையில் அனேக வருஷங்கள் கடந்து போகின்ற வேலையிலே, பல காரியங்களில் வளர்ச்சியடைய அவர் நம்பிக்கை கொண்டிருந்தாலும் அது முடியாமல் போகின்றது. அப்படிப்பட்ட பிரசங்கியார் தன்னுடைய ஊழியத்தை மதிப்பிட்டு, பிரச்சனைகள் தன்னிடத்திலா அல்லது பிராந்திய சபையிலா என்பதை கண்டுபிடிக்க வேண்டும். பிரச்சினைகள் பிராந்திய சபையில் இருந்தால், குறிப்பிட்ட காலத்திலே அவர் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. மேலும், அவர் கட்டுகளை உடைத்து, தன்னுடைய வாழ்க்கையை வீணாக்காமல், சுதந்திரமாக ஊழியம் செய்ய உடனடியாக செயல்பட வேண்டும்.

## தேவனுடைய செய்தியை பெற்ற மனிதன்:-

தேவனுடைய செய்தியைப் பெற்ற ஒரு மனிதனாக இருக்கின்றோம் என்ற உண்மையை ஒரு பிரசங்கியார் அறிந்து கொள்ள வேண்டும். மனிதர்கள் தேவனோடு சேர்ந்து கிறிஸ்துவே தங்களுடைய நம்பிக்கையாக எண்ணிக் கொள்வதைப் பற்றியும், மனந்திரும்புதலைப் பற்றியும் யோவான்ஸ்நானகன் பிரசங்கம் செய்து வந்தார். தன்னுடைய இருதயத்தில் ஒரு செய்தியை கொண்டிருக்கிற மனிதன் உலகத்தில் பிரச்சனைகளை அறிந்து தேவனுடைய வார்த்தையை இன்றைய காலத்திற்கு ஒப்பிட்டுப் பார்ப்பான். தொலைகாட்சி, பள்ளிப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள மனிதநேயம், சமுதாயத்தில் நடக்கின்ற பல காரியங்கள், இருளிலே இருக்கும் உலகத்தின் நிலைமற்றும் இழந்து போகின்ற மனிதர்களின் நிலை, ஆகியவற்றிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு இயேசு கிறிஸ்துவே உலகத்தின் ஒளி என்று பிரசங்கிக்க வேண்டும். தேவையைப் பற்றியும்

அதற்குரிய பலனைப் பற்றியும் அறிந்தவராக ஒரு பிரசங்கியார் இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதின் மூலமாக வெற்றியடைய முடியும் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும். இழந்து போன உலகத்திற்குரிய தேவைகளை நிறைவேற்ற அவர் எண்ணம் கொண்டவராக இருக்க வேண்டும்.

உபத்திரவத்தின் காலத்தில் ஒரு தேவனுடைய மனிதனுக்கு, தான் தேவனுக்காக சிறந்த வழிநடத்துபவராக இருப்பதற்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் தேவைப்படுகிறது. அவர் கொடுக்கக்கூடிய வழிநடத்துதல் சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்கு எதிர்மாறாக எண்ணப்படும். தேவன்மேல் இருக்கக்கூடிய உண்மையான அன்பை இழந்து நிற்கிற பிராந்திய சபையின் பழக்கவழக்கங்களுக்கு எதிராக அவர் செல்ல முற்படலாம். ஒரு பிரசங்கியார் தனது ஊழியத்தில் வெற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்றால், தன்னுடைய நீதியில் வளர்ச்சி அடைந்தவராகவும், நிலையான எண்ணம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவர் வரவேற்கின்ற திட்டம் மற்றும் எண்ணங்கள் பிராந்திய சபைக்கு பிரயோஜனமுள்ளதாகவும், உண்மையுள்ளதாகவும், சரியான நோக்கம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அவர் எடுக்கின்ற ஒவ்வொரு புதிய முயற்சியும் வெற்றி பெற்றால், ஒரு பிராந்திய சபை அவருடைய அடுத்த எண்ணத்திற்கும் செவிசாய்க்கும். தான் முதலில் சிந்தித்த காரியத்தை நடத்தி முடிப்பதற்குள், அடுத்தக் காரியங்களைப் பற்றி சிந்திப்பாரானால், ஒரு பிரசங்கியார் சபையை சரியான முறையில் வழிநடத்த முடியாமலும் தான் என்ன செய்கிறோம் என்பதையும் அறிந்து கொள்ள மாட்டார். பிராந்திய சபையானது பிரசங்கியாரிடத்திலும், அவருடைய குடும்பத்திலும் தங்களையே அர்ப்பணிக்கின்ற எண்ணமும், உறுதியான நிலையும் காணமுடியாவிட்டால், அந்த பிரசங்கியார் அவர் கொடுக்கின்ற வழிநடத்துதலின்படி, அந்த பிராந்திய சபையை வழிநடத்த அவரால் முடியாது.

ஒரு பிரசங்கியார் சிறந்த வழிநடத்துபவராக இருக்கின்றார் என்றால், மக்களுடைய வாழ்க்கையில் இருக்கின்ற பிரச்சினைக்கு பதில் உள்ளவராக அவர் முன்வரவேண்டும். பிராந்திய சபையை திடமாக வளர்க்கக்கூடிய அவருடையத் திட்டம் சிறந்ததாக இருக்க வேண்டும். மேலும் அது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். ஆண்டவருடைய திட்டத்தின்படி சபையை ஒரு பெரிய உற்சாகமான சபையை வளர்க்கக்கூடிய திட்டங்களை அவர் மேற்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவும், செயலற்ற பிராந்திய சபையை வெற்றிகரமாக உற்சாகமுள்ள சபையாக மாற்றவும் கூடிய மருந்தை அவர் அளிக்க வேண்டும். இப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மருந்து வேதாகமமாகிய தேவனுடைய வார்த்தையே.

*தெரிந்தெடுக்கப்பட்டது.*

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001
Tuesdays - 2:00 to 2:15 P.M.
Thursdays - 2:15 to 2:30 P.M.
Fridays- 2:15 to 2:30 P.M.

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, April 1994
April 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK POST

To

If undelivered Please return to
The Editor
**THIRUMARAI AASAAN**
POST BOX No 27, KANGAYAM - 638 701